
ஓர்
இரவு
கதை, வசனம்:
C.N. அண்ணாத்துரை, M.A.,
AVM
புரொடக்ஷன்ஸ்
2
அணா
G.H. RAO

# ஓர் இரவு

---

## நடிகர்கள்.

| | | |
|---|---|---|
| டி. கே. ஷண்முகம் | .. | கருணாகரத் தேவர். |
| டி. எஸ். பாலையா | .. .. | ஜெகவீரன். |
| கே. ஆர். ராமசாமி | .. .. | ரத்னம். |
| ஏ. நாகேஸ்வர ராவ் | .. | சேகர். |
| டி. எஸ். துரைராஜ் | .. .. | கம்பவுண்டர். |
| கே. ராமசாமி | .. .. | அகராதி. |
| எஸ். வி. வெங்கட்ராமன் | .. | குடியானவன். |
| என். எஸ். நாராயண பிள்ளை | .. | கணக்கப் பிள்ளை. |
| துரைசாமி | .. .. .. | தாத்தா. |
| டி. எஸ். தக்ஷிணாமூர்த்தி | .. | பப்ளிக் ப்ராசிக்யூட்டர். |

## நடிகைகள்.

| | | |
|---|---|---|
| லலிதா | .. .. .. | சுசீலா. |
| சரோஜா | .. .. .. | சொர்ணம். |
| முத்துலெட்சுமி | .. .. | பவானி. |
| அங்கமுத்து | .. .. | வேலைக்காரி. |

மற்றும்

எம். ஜி. தண்டபாணி நாயுடு, காசிநாதன், சி. வி. ராமச்சந்திரன், சிவராமன், அருணகிரிநாதன், கல்யாணம், காளியப்பா, கல்யாணி, லெக்ஷிமி, சௌளந்தரம், பேபி சுகுமாரி, முதலியோர்.

# ஓர் இரவு

---

| | | |
|---|---|---|
| கதை, வசனம் | .. | சி. என். அண்ணாத்துரை, எம். ஏ. |
| பாடல்கள் | .. | புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.<br>டி. கே. ஷண்முகம்.<br>கே. பி. காமாட்சி சுந்தரம்.<br>கு. மா. பாலசுப்ரமண்யம். |
| ஒளிப்பதிவு | .. | எஸ். மாருதி ராவ். |
| உதவி | .. | தனசிங்.<br>புண்யகோடி. |
| ஒலிப்பதிவு டைரக்டர் | .. | இ. ஐ. ஜீவா. |
| ஒலிப்பதிவு | | முகுந்தன் & மாணிக்கம். |
| உதவி | .. | விஸ்வனாதன்<br>ராமனாதன்<br>பாலு |
| ரிகார்டிங் | .. | ஆர். ஸி. ஏ. சவுண்ட் ஸிஸ்டம். |
| எடிட்டிங் | .. | கே. சங்கர். |
| உதவி | .. | பி. எல். மணி.<br>பி. கோபாலன். |
| ப்ரோஸஸிங் | .. | சுதீர் குமார் டே. |
| உதவி | .. | பி. வி. நாயகம்.<br>எம். என். நம்பியார்.<br>பஞ்சாபகேசன்.<br>டி. ராமசாமி. |

| | | |
|---|---|---|
| மேக்கப் | .. | ஹரிபாபு & கே. என். இனி. |
| உதவி | .. | ராமச்சந்திரன்<br>ராமானுஜம் |
| ஆர்ட் | .. | ஏ. பாலு. |
| உதவி | .. | எம். அழகப்பன். |
| சங்கீத டைரக்ஷன் | .. | ஆர். சுதர்சனம் |
| பின்னணி இசை | .. | சரஸ்வதி ஸ்டோர்ஸ்<br>ஆர்க்கெஸ்ட்ரா. |
| பின்னணிப் பாடல்கள் | .. | வசந்தகுமாரி<br>பகவதி<br>ராஜேஸ்வரி<br>வர்மா |
| நடனம் | .. | லலிதா பத்மினி<br>குமாரிகமலா, லக்ஷ்மிகாந்தம் |
| நடன அமைப்பு | .. | வழுவூர் ராமையா பிள்ளை<br>ஹீராலால். |
| ஸ்டுடியோ | .. | ஏவி. எம். ஸ்டுடியோஸ்,<br>சென்னை. |
| டைரக்டருக்கு உதவி | .. | கே. சிங்கமுத்து.<br>எஸ். வி. வெங்கட்ராமன். |

★

டைரக்ஷன் :

**ப. நீலகண்டன்.**

★

மேற்பார்வை :

**ஏவி. மெய்யப்பன்.**

# ஓர் இரவு

---

**கதைச் சுருக்கம்.**

அவள் ஒரு வானம்பாடி. பால் வடியும் முகம். அவளுக்கு **சொர்ணம்** என்பது எவ்வளவு அழகான பெயர்!

சீரூர் ஜமீந்தார் **கருணாகரத் தேவர்** அவளது வனப்பிலே தன் வாலிப உள்ளத்தைப் பறிகொடுக்கிறார்.

ஜமீந்தார் "சின்ன ஜாதிப் பெண்ணை" மணந்துகொள்ளப்போவதை அறிந்த நாட்டு மக்கள் அவரை ஜமீன் பதவியிலிருந்து விலக்க ஏற்பாடு செய்கிறார்கள். தேவர் கலக்கமடைகிறார். சொர்ணத்தை ஆசை நாயகியாக வைத்துக்கொண்டால் ஜமீந்தாராகவே இருக்கலாம் என்று யோசனை கூறுகிறான் கணக்கன்.

ஆசை நாயகி! அடபாவி! நம்பிக் கெட்ட அந்த அபலையின் உள்ளம் என்ன பாடு பட்டிருக்கும்! சீறி எழுந்த அவளைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிடுகிறார் தேவர்.

பிறகு என்ன! ஜமீன்தார் ஜமீன் குலத்திலே ஒரு பெண்ணை மணந்துகொள்கிறார்.

கர்ப்பிணியான சொர்ணம் ஊரைவிட்டு ஓடிவிடுகிறாள். சென்னையில் எங்கெங்கோ வேலை பார்க்கிறாள். ஒரு அபலைப் பெண் இந்த உலகிலே தனித்து மானத்தோடு வாழ முடியுமா? கற்பைக் காப்பாற்றிக்கொள்ள அவளுக்குத் தோன்றிய ஒரே வழி . . . . . . ? ஓடுகிறாள். ரயில் தண்டவாளத்திலே தலை வைத்துப்படுக்கிறாள். வேகமாக வருகிறது ரயில். சொர்ணம் கண்களை இறுக மூடிக்கொள்கிறாள். உடல் நடுங்குகிறது "வீல்" என்ற பெரும் சத்தத்துடன் ரயில் பாய்ந்து வருகிறது. . . .

* * * *

தேவரின் மகள் **சுசீலா** குமரியாகிறாள். அவளுக்கும் டாக்டர் சேகருக்குமிடையே காதல் மலர்கிறது. ஆனால் . . . சுசீலாவைத் தனக்கே மணமுடிக்க வேண்டுமெனக் கூறுகிறான் **ஜெகவீரன்.** இடிவிழுந்ததுபோலத் திடுக்கிடுகிறார் **தேவர்.** தன் மாளிகை, சொத்து அத்தனையும் கொடுத்துவிடுவதாகக் கூறி தன் அருமை மகளை மட்டும் பலி கேட்க வேண்டாமெனக் கெஞ்சுகிறார். "என்னிடமிருக்கும் ரகசி

யத்தை உலகுக்குக் காட்டி உன்னை என்னபாடு படுத்துகிறேன் பார்!" என்று மிரட்டுகிருன் ஜெகவீரன். தேவர் நடுங்கு கிருர். யாரிந்தக் கல் நெஞ்சன்? தேவர் ஏன் அப்படி அவனிடம் நடுங்கிச்சாகிருர்? அவனிடம் சிக்கியிருக்கும் அந்தப் பயங்கர ரகசியம்தான் என்ன?

இறுதியிலே அருமை மகளை அவனுக்குப் பலி கொடுக்கச் சம்மதிக்கிருர் தந்தை. தந்தையின் உயிரைக் காப்பாற்றத் தன் காதலைத் தியாகம் செய்ய இசைகிருள் சுசீலா.

கடைசி முறையாகச் சேகரைச் சந்திக்க வெளியே புறப்படு கிருள் சுசீலா. காதல் போயிற் சாதல்தானே முடிவு!

நந்தவனத்தில் காதலனைச் சந்திக்கிருள் சுசீலா. இது தானே கடைசி இரவு! கடைசிச் சந்திப்பு! இன்பமாகப் பேசு கிருன் சேகர். ஆனல் அவள் . . . . . .? சேகரை விட்டுப்பிரியும் போது அவனுக்குத் தெரியாமல் விஷமருந்தை எடுத்து வருகிருள்.

தன் அறையில் பாலில் விஷத்தை விட்டுக் கலக்கு கிருள். வாயருகே கொண்டு செல்கிருள். பால்கனி வழியாக ஒரு உருவம் அறைக்குள்ளே வருகிறது! தலை நிமிர்ந்து பார்க் கிருள் சுசீலா. கள்ளன்! கையிலே துப்பாக்கி! கலங்கவில்லை சுசீலா. அவள்தான் சாகத் துணிந்துவிட்டாளே. திடீரென்று ஒரு யோசனை தோன்றுகிறது அவளுக்கு. சிறிது நேரத்தில் ஜெகவீரன் அங்கு வரப்போகிருன். அந்தச் சமயத்தில் அன் னியன் ஒருவனேடு காதல் நாடகமாடிக் கொண்டிருந்தால் அவன் தன்னை வெறுத்துவிடுவான். பலவந்த மணத்தி லிருந்து தப்பிவிடலாம்! ஆம்! சரியான தந்திரம்! களவாட வந்தவனைக் காதலனுக நடிக்கும்படி வேண்டுகிருள் சுசீலா. அவளது நிலையை யுணர்ந்த ரத்னமும் சம்மதிக்கிருன்.

காலடிச் சத்தம் கேட்கிறது. சுசீலா பர பரப்படைகிருள். இருவரும் காதல் நாடகத்தை ஆரம்பிக்கிருர்கள். திரையை விலக்கி உள்ளே வருகிருன் அவன். எப்படியிருக்கும் அவ னுக்கு! "மோசக்காரி! வஞ்சகி!" என்று இரைகிருன். ரத்னத் தைத் தாக்குகிருன். நல்ல சண்டை!

கூச்சலைக் கேட்டு மேலே வந்த தந்தை எல்லாவற்றையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டு நிற்கிருர். அருமை மகள் விபசாரி! தலையிலடித்துக்கொண்டு கதறுகிருர்.

அருமைத் தந்தையின் வாயால் விபசாரி என்ற பட்டம்! இனி வாழ்வு எதற்கு? விஷக் கோப்பையைக் கையிலெடுக்கிருள் சுசீலா! முடிவு.....? திரையில்.....

பாடல் : ஔவை டி. கே. ஷண்முகம்.

**சொர்ணம்.**

எங்க நாடு—இது எங்க நாடு
எங்கும் புகழ் தங்கும் நாடு—வளம்
பொங்கும் நாடு—வந்த
எல்லார்க்கும் எடங்கொடுத்து
ஏமாந்த நாடு (எங்க)

தங்கக் குடிசையில்லாமெ
தரித்திரமானாலும்—தலைவிதின்னு
நம்பிக்கிட்டு—சாமியெக்
கும்பிடும் நாடு. (எங்க)

சங்கம் வச்சு மொழி வளர்த்த
தமிழ்நாடு . . . . இப்போ
தாய் மொழியைக் கதம்பம் பண்ணும்
சண்டாள நாடு.
சொந்த நாட்டு மனுஷங்களைத் தூக்கிப் பேசாது
சொரண்ட வந்த ஆளுக்கெல்லாம்
தொழுது மாலைபோடும் நாடு. (எங்க)

உலகுக்கெல்லாம் தருமம் சொல்லி
உயர்ந்த நன்னாடு
உயர்ந்த நன்னாடு—இப்போ
உயர்வு தாழ்வு பேசிப் பேசி
ஒத்துமையில்லா நாடு—இது
எங்க நாடு . . . . எங்கும்
புகழ் தங்கும் நாடு . . . .

## சிவசக்தி நடனம்.

**பார்வதி :** பூலோகந்தனைக்காண வருவீர் ஸ்வாமி—என்றும்
புகழோடு சுகமாய் மாந்தரெலாம் சமமாக உயிர்
வாழும்

**சிவன் :** பாராமல் வீண்கனவு காணுதே
நீ அறிவாய் நேரினிலே
மானிலத்தோர் மதியிழந்தே வாடும்
(பூலோகம்)

**பார்வதி :** எண்ணத் தொலையாத ஜாதிச் சண்டை
எங்கு பார்த்தாலும் பட்டினிக் கொடுமை
கண்ணிருந்தும் குருடாகித் தவிக்கின்ற
காட்சியைப் பாராதிருக்கலாமா ?

**சிவன் :** யார்மீதிலே குற்றம் சொல்லு ?—மனிதர்
அறியாமல் திண்டாடும் பரிதாப நிலைமைக்கு
(யார் மீதிலே)

நீரோடு நிலமும் தந்தோம்—என்றும்
நிலையான செல்வங்கள் பலகோடி தந்தோம்
சீராகப் பாடுபட்டாலே—மக்கள்
தேவைக்கு அதிகமாய் விளையும் மண்மேலே
(யார்மீதிலே)

**பார்வதி :** காக்குந் தெய்வம் கருணைநிதி என்று
ஆலயம் கட்டிவைத்தார்—ஆறு
காலமும் பூஜை அபிஷேகம் அர்ச்சனை
உற்சவம் செய்துவைத்தார்

**சிவன் :** பாரெல்லாம் மகிழ்வடைந்தால்—அதுவே
பக்தர்கள் செய்யும் உற்சவமாகும்
ஊரெல்லாம் கோயில்கள் ஏன் ? அடியார்
உள்ளமே எந்தன் திருக்கோயில்

**இருவரும் :** கேளீர் கேளீர் ஜெகத்திரே !
கேடுகள் நீங்கி வாழ்வீரே !
திறமைக் கேற்ப உழைத்திடுவீர் !
தேவைக்கேற்ற பொருள் பெறுவீர்
ஒன்ருய் வாழ்வதே அறிவுடமை
உலகப் பொருளெலாம் பொதுவுடமை

---

பாடல் :—கு. மா. பாலசுப்ரமண்யம்.

**சொர்ணம்.**

புவிமேல் மானமுடன் உயிர் வாழ
வழியேதும் இல்லையே

பெண்ணாகப் பிறந்தாலே—வாழ்வில்
என்னாளும் துயர்தானே—உன்
ஆசைக் கனவெலாம்
மண்ணாகிப் போனதே !

கண்ணிருந்தும் நீ வழிதடுமாறி
பெண்மை மறந்தாயே
காதலெனும் பெரும் போதையினாலே
வேதனையடைந்தாயே! (பெ.)

கானல் வெளியை நீரென நம்பி
மானம் அழிந்தாயே !
கண்ணகி தோன்றிய மண்ணில் பிறந்தும்
கற்பை இழந்தாயே! நீ
இன்னமும் வாழ்வாயோ ! உலகில்
இன்னமும் வாழ்வாயோ! . . . . .

பாடல் :—கே. பி. காமாட்சிசுந்தரம்

**சுசீலா**

வசந்த முல்லையும் மல்லிகையும்
அசைந்தே ஆடிடுதே
அசைந்தே ஆடிடுதே

இசைந்த காதலன் சேகரனை
மனம் நாடுதே—என்
மனம் நாடுதே (வசந்த)

உயர்ந்த வானவில் போலே—உடை
ஒய்யாரமாய் அணிவேனே இனி நானே—என்
அழகெனும் போதையில் தானே—மயங்கி
ஆடிடச் செய்திடுவேனே
உள்ளத்தில் இன்பம் பெறவே
நான் பாடுவேன் . . . .

அன்பாய்ப் பேசினால்—நான்
வம்பாய்ப் பேசுவேன்—என்பால்
வாவென்றால் . . . . . எட்டி
ஓடுவேன் . . . . . (வசந்த)

பாடல் :—கே. பி. காமாட்சிசுந்தரம்.

**சுசீலா & சேகர்.**

படுத்துறங்கும் போதினிலே
பட்டப்பகல் வேளையிலே
அடுத்தொருவன் செய்த—பொல்லா
அக்ரமத்தை என்ன சொல்வேன்.

அக்கம் பக்கம் யாருமில்லே
மிக்க ஆசை கொண்டொருத்தன்
கிட்ட வந்தான்—ஒருத்தன்
கிட்ட வந்தான்

சேகர் : ஆ !

சுசீலா : உம் !

வெள்ளிக்கெண்டை போட்ட வேட்டி கட்டி
கெம்பீர நடை நடந்து
கிட்ட வந்தான் . . . . ஒருத்தன்
கிட்ட வந்தான்

சேகர் : யாரவன் ?

சுசீலா : வாச—சந்தனம் சவ்வாது பூசிச்
சொந்தக்காரன் போலப் பேசிக்
கிட்ட வந்தான்—ஒருத்தன்
கிட்ட வந்தான் . . . . (அ)

கண்—உறக்கம் நீங்கி முளிச்சுப்பாத்தேன்
உத்துப்பாத்திட்டான்

முன்—பழக்கமான ஆளெப்போலப்
பாத்து சிரிச்சிட்டான்

என்—உதவிக்காக ஆளைத்தேடி
அழுதும் பாத்திட்டேன்—நான்
அழுதும் பாத்திட்டேன்

அவன் பயப்படாதே என்று சொல்லிப்
பக்கம் இருந்திட்டான்.

சேகர் : அப்புறம் ?

சுசீலா : அடி—கட்டிக்கரும்பே கல்கண்டே
கட்டாணி முத்தே என்றென்னைத்
தொட்டணைத்தான்—என்னைத்
தொட்டணைத்தான்—காலால்
எட்டி உதைத்தேன்—சிரித்தான்
இன்னொரு உதை கொடென்று
தொட்டணைத்தான்—என்னைத்
தொட்டணைத்தான்

சேகர் : அப்படியா ? நீ என்ன செய்தே ?

சுசீலா : மனம் பதறிக் கையை உதறித்தள்ளிப்
பாத்தேன் முடியலே . . . .
நான் பாய்ந்து ஓட நினைத்தேன்
ரெண்டு காலும் நடக்கல்லே
நான் அசந்துபோன நிலையைக் கண்டு
அறிவில்லாதவன்—அந்த
அறிவில்லாதவன்—நான்
இசைந்ததாக எண்ணி—என்னை
இறுக அணைத்திட்டான்—என்னை
இறுக அணைத்திட்டான்

சேகர் : ஐயையோ !

சுசீலா : அது மட்டுமா ?
சிறு சிட்டுப்போலப் பேசும்
நல்ல சீனத்துக்கிளி என்றென்னை
முத்தமிட்டான்—என்னை
முத்தமிட்டான்.

சேகர் : என்ன ! நீ சும்மாவா இருந்தே ?

சுசீலா : நான் என்ன செய்வேன் ?
பார்த்தவர்கள் ஆசைகொள்ளும்
பருவம்—வயது ரெண்டு

சேகர் : என்ன . . . . . !

சுசிலா : ஆமாம். அப்ப எனக்கு
வயது ரெண்டு—என்
தாத்தா என்னை எடுத்துத்
தாலாட்டி முத்தமிட்டார் !

---

பாடல் :—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

சுசிலா.

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்கமாட்டாயா—எமக்
இன்பம் சேர்க்கமாட்டாயா

அன்பிலா நெஞ்சில் தமிழில்பாடி நீ
அல்லல் நீக்கமாட்டாயா—கண்ணே
அல்லல் நீக்கமாட்டாயா . . . . .

வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க—நீ
அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக் காட்டமாட்டாயா.

அறமிதென்றும் யாம் மறமிதென்றுமே
அறிகிலாத போது—யாம்
அறிகிலாத போது—தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக்காட்டமாட்டாயா . . . . நீ
இயம்பிக்காட்டமாட்டாயா . . . . (து)

சேகர்.

நீ அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக்காட்டமாட்டாயா—கண்ணே
ஆடிக்காட்டமாட்டாயா.

பாடல் :—கே. பி. காமாட்சிசுந்தரம்.

## ஜிப்சி நடனம்.

### சேகர்.

ஆ . . . . . . . . .

அரும்புபோல் மீசை வைத்து
அரைக்கை கோட்டு மாட்டி
குறும்பான வாலிபத்தின் கோளாறுல்—தன்னை
விரும்பாத பெண்டுகளை நடுவீதியில்

பாத்துப் பாத்து கண்ணு ரெண்டும்
பார்வை மங்கிப் போனதே
காத்துக் காத்து நின்னு நின்னு
காலும் ஓஞ்சி போனதே. (புசு.)

ஓ டியாலோ டியோ டியோ.

சு : எடுப்பாரு ஐயா குடுப்பாரு
குடுப்பாரு தங்கக்கையாலே
ஐயா தரும குணத்தை இப்ப பாரு

பத் : ஊஹூம் ! தம்பிடி குடுக்கமாட்டாரு

சே : இல்லே எடுப்பாரு ஐயா குடுப்பாரு
குடுப்பாரு இப்ப புது நோட்டுத்தான்

இரு : டியாலோ டியோ டியோ

மூவ : ஓடியோ ! ஓடியோ ! ஓடியோ !

சு : இவர் முறுக்குமீசை வெகு ஜோக்கு

பத் : பொம்பளே மோகம் கொண்டு சிவந்த மூக்கு

சு : தருவாரே ஐயா கையாலே நோட்டு

பத் : வீண் பேராசை கொள்ளாதே நீ
குடுப்பாரே டூப்பு.

சு : இல்லேடி புது நோட்டுத்தான்

பத் : இல்லே டூப்புத்தான்

அ : நோட்டுத்தான்

பத் : பேப்புத்தான்

அ : நோட்டுத்தான்

அ : ஊய் . . . . . .
கையைப் போடுறாடி—அதோ
ஜோபில் கையைப் போடுறாடி

பத் : ஊய் . . . . .
ஜோக்குக் காட்டி எய்க்கிறாடி
ஐயா ஜோக்குக்காட்டி எய்க்கிறாடி

இரு : சும்மா சும்மா பாக்குறாடி பாக்குறாடி

அ : ஐயா கடைக்கண்ணுலே பாத்துக்குடுக்கும்
கர்ணந்தாண்டி.

பத் : ஊ ஹூம்.

அ : டிப் டாப்பா பொம்பளேயைப் பாத்தீங்க

பத் : திருடன்கிட்ட மணிபர்சைச் சேத்தீங்க

அ : பழகாத பொண்ணேப் பாத்துச் சிரிக்காதீங்க

பத் : முன்பின்—பழகாத பொண்ணேப்
பாத்துச் சிரிக்காதீங்க

அ : முதுகில்—தலகாணி கட்டிக்கோணும்
மறக்காதீங்க . . . . . (ஐயா)

பத் : பொண்டாட்டிக்குத்துரோகம் செய்யலாமா
தாலிகட்டின பொண்டாட்டிக்குத் துரோகம்
செய்யலாமா
போரவர்ர பொண்ணுங்க மேலே
ஆசை வைக்கலாமா . . . .

வணக்கம் சார் ! வணக்கம் சார்
வணக்கம் சார் ! வணக்கம் சார்

---

பாடல்:—கே. பி. காமாட்சிசுந்தரம்.

**ரத்னம்.**

என்ன உலகமடா—இது
என்ன உலகமடா—இது
ஏழைக்கே நரகமடா. (எ)

தன்னலப் பேய்களுக்கே—இது
தங்கச் சுரங்கமடா (எ)

தில்லு முல்லுகள் செய்தே
திருடும் குபேரனெல்லாம்
அல்லல் படும் ஏழையைக்
கள்ளனென்று ஏசுகின்றார்
அல்லல்படும் ஏழையைக்
கள்ளனென்று ஏசுகின்றார். (எ)

கட்டத்துணியுமின்றி—மக்கள்
கட்டத்துணியுமின்றி கந்தல் பொறுக்கையிலே
மொட்டைக்கதவு ஜன்னல் எல்லாம்
பட்டாடை போர்த்துகின்றார். (எ)

வீடுகட்டும் பாட்டாளி
வீதியிலே தூங்குகின்றான்
கூடியந்த மாடியிலே கும்மாளம் போடுகின்றார். (எ)

பானையில் கஞ்சியின்றி பட்டினியால் வாடுகின்றார்
வீணர்கள் தின்றுமிஞ்சி வீதியிலே போடுகின்றார்.
எய்த்துப் பிழைப்பவர்க்கே—ஊரை
எய்த்துப் பிழைப்பவர்க்கே—இங்கே
இந்திர போகமடா—இது
எல்லோர்க்கும் இல்லையடா . . . . . .

பாடல் :—கே. பி. காமாட்சிசுந்தரம்.

## குறத்தி நடனம்.

ஓ சாமி !

ஐயா சாமி ! ஆவோஜி சாமி !

ஐயா ராய்யா ! வாய்யா, யூகம்மய்யா

ஐயா சாமி ! ஆவோஜி சாமி !

நரிக் கொம்பிருக்கு வாங்கலேயோ !

ஐயா சாமி . . . ஓ ஐயா சாமி.

கோழி ஆட்டைப் பிடிக்கும் எங்கக் குள்ள நரி
ஏழை ரத்தம் குடிக்கும் இங்கே உள்ள நரி
பல்லிளிச்சுக் காட்டி, பட்டம் பதவி தேடி
கட்சிபேரைச் சொல்லி ஊரை ஏமாத்திடும்.

(ஐயா சாமி)

வேட்டையாடிப் பிழைக்கும் எங்கக்காட்டு நரி
மூட்டைகட்டிப் பதுக்கும் உங்க நாட்டு நரி
வேலே ரொம்ப வாங்கும்
கூலி தர ஏங்கும்
பட்டினியெப் பாத்தும் புளி ஏப்பம் விடும்

(ஐயா சாமி)

காட்டிலுள்ள நரி ரொம்ப நல்லதுங்க
நாட்டிலுள்ள நரி ரொம்பப் பொல்லாதுங்க.
குள்ள நரிக் கொம்பை
கோத்துப் போடு சாமி
புள்ளெகுட்டிக் காச்சும் நல்லபுத்திவரும்

(ஐயா)

---

பாடல் :—மகாகவி பாரதியார்.

**ரத்னம் :** கொட்டு முரசே ! கொட்டு முரசே !
கொட்டு முரசே ! கொட்டு முரசே !
அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரும் நிகராம் . . .

**சுசீலா :** இன்பங்கள் யாவும் பெருகும் . . . இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

**சேகர் :** ஜாதிக் கொடுமைகள் வேண்டாம்
அன்பு தன்னில் செழித்திடும் வையம்

**ரத்னம் :** ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்

**எல்லோரும் :** ஒன்றென்று கொட்டு முரசே ! அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே !
நன்றென்று கொட்டு முரசே !—இந்த
நானில மாந்தருக் கெல்லாம் !

---

**Associated Printers (Madras) Ltd.**


இப்படத்தின் பாடல்களை
கொலம்பியா
ரிகார்டுகளில் கேளுங்கள்
"MAGIC NOTES"
TRADE MARK